[1981 பிப்ரவரி 28]

திருவில்லிபுத்தூரில் மூலிகைத் தோட்டம்.

*வினா எண். 317—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் டவுன் செண்பகத்தோப்பிற்கு அருகில் துளசி மூலிகைத் தோட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கென எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?

(இ) இச்செயற்குறிப்பு எப்பொழுதுமுதல் நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) 1980–81 இல் ரூபாய் மூன்று லட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

(இ) இதற்குத் தேவையான நிலம் பற்றி பரிசீலிக்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, துளசியில் கரும் துளசி, வெள்ளைத் துளசி என்று இருக்கிறது. இதில் எது மருந்துகளுக்கு அதிகமாகப் பயன்படுகிறது? கிராமப் புறங்களில் உள்ள வீடுகளில் துளசி வைத்தால் கொசு வராது என்று சொல்கிறார்கள். எனவே, வீட்டுக்கு ஒரு துளசித் தோட்டம் மாதிரி வைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, திருவில்லிப்புத்தூர் டவுன் செண்பகத்தோப்பிற்கு அருகில் துளசி மூலிகைத் தோட்டம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதாகும். அதற்குத்தான் விடையளித்தேன். பொதுவாக துளசிச் செடியை எல்லா வீடுகளிலும் தோட்டத்திலே வைத்துக் கொள்ளலாமா என்று எழுப்பியிருக்கிறார்கள். நிச்சயமாக வைத்துக்கொள்ளலாம். நல்ல மருந்துதான், அதனால் பல நன்மைகள் உண்டு.

[1981 பிப்ரவரி 28

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிந்தள் செடி மூளை வளர்ச்சிக்குப் பயன்படும். அதே மாதிரி, பசுமைகாந்தி உடம்பு வளர்ச்சிக்குப் பயன்படும். தமிழ் நாட்டிலுள்ள பெரும்பகுதி பள்ளி மாணவர்கள் வெறும் நோஞ்சான்களாக இருக்கிறார்கள். அதனால், உணவுடன் இந்தத் துளசியை—டானிக் மாதிரி இருக்கிற காரணத்தால், இதைக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா? மாணவர்களது பாடப் புத்தகத்தில் இந்த மூலிகையைப் பற்றி விவரித்துச் சொல்ல அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன். (விடை இல்லை.)

இராதாபுரம் தொகுதியில் மினி பஸ் போக்குவரத்து.

*வினா எண் 318—திரு. இ. முத்துராமலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் தொகுதியிலுள்ள குக்கிராமங்களுக்கு மினி பஸ் விடும் திட்டம் எதுவும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் நாங்குநேரி, இராதாபுரம் தொகுதிகளில் அநேக கிராமங்களில் உள்ள ரோடுகள் குறுகலாகவும், ஏராளமான வளைவுகளோடும் உள்ளன. இதில், பெரிய பஸ்கள் விட வாய்ப்பில்லையென்று ஹைவேஸ் இன்ஜினியர்கள் கூறுகிற காரணத்தினால், மினி பஸ்கள் விட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரோடு குறுகலாக இருந்து, பெரிய வண்டிகள் போகாத இடத்திற்குத்தான் மினி வண்டிகள் விட வேண்டுமென்று அரசாங்கம் முடிவெடுத்து, அதற்கான நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே, படிப்படியாக, எங்கெங்கு அப்படி இருக்கிறதோ அந்த இடங்களுக்கு அந்த மினி பஸ்களை விட அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.